(ஒன்பதாவது பாராளுமன்றம் - மூன்றாவது கூட்டத்தொடர்)

**இல. 57.]**

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

### 2023 ஜனவரி 19, வியாழக்கிழமை, மு.ப. 9.30 மணிக்கு

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1.

2003/2022

கௌரவ ஜே.சீ. அலவத்துவல,— சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சரைக் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) குருநாகல் மாவட்டத்தில் காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவினால் சுவீகரிக்கப்பட்டு, மக்களுக்கு வசிப்பதற்காக இதுவரை பகிர்ந்தளிக்கப்பட்டுள்ள ஒவ்வோர் காணியினதும் பெயர், காணியின் அளவு, காணித்துண்டுகளின் எண்ணிக்கை, காணித்துண்டுகளை பகிர்ந்தளித்த திகதி, காணி அமைந்துள்ள கிராமம், கிராம சேவகர் பிரிவு மற்றும் பிரதேச செயலாளர் பிரிவு என்பன வெவ்வேறாக யாவை என்பதையும்;

(ii) மேற்குறிப்பிட்ட காணித்துண்டுகளுக்கு உறுதிகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) இன்றேல், அக்காணிகளுக்கு உறுதிகளை வழங்க உத்தேசித்துள்ள திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபையில் தெரிவிப்பாரா?

(ஆ) (i) மேலே அ(i) இல் குறிப்பிடப்பட்டுள்ள காணித்துண்டுகளுக்காக பணம் அறவிடப்படுமா என்பதையும்;

(ii) ஆமெனில், எவ்வடிப்படையில் பணம் அறவிடப்படும் என்பதையும்;

அவர் இச்சபையில் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2.

2045/2022

கௌரவ வேலு குமார்,— நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மலையக பெருந்தோட்டப் பிரதேசங்களில் அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுப்பதற்காக "பெருந்தோட்டப் பிராந்தியத்திற்கான புதிய கிராமங்கள் அபிவிருத்தி அதிகாரசபை" நிறுவப்பட்டுள்ளதென்பதை அறிவாரா என்பதையும்;

(ii) மேற்படி அதிகாரசபையின் நிர்வாகக் கட்டமைப்பு யாதென்பதையும்;

(iii) மேற்படி அதிகார சபைக்கு தற்போது நியமிக்கப்பட்டுள்ள அலுவலர்களின் பெயர் விபரங்கள் யாவை என்பதையும்;

(iv) இந்நியமனங்கள் வழங்கப்படுகையில் கவனத்திற்கொள்ளப்பட்ட தகைமைகள் ஒவ்வொரு பதவியினடிப்படையில் வெவ்வேறாக யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி அதிகாரசபையின் நோக்கங்கள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி அதிகாரசபையால் நிறைவேற்றப்படும் கருமங்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி அதிகாரசபையால் எதிர்காலத்தில் புதிய கருத்திட்டங்களை செயற்படுத்த திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

(iv) அவ்வாறாயின், அத்திட்டங்கள் யாவை என்பதையும்:

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3.

2060/2022

கௌரவ நலீன் பண்டார ஜயமஹ,— முதலீட்டு மேம்பாட்டு அமைச்சரைக் கேட்பதற்கு,—(2)

(அ) (i) ஹம்பாந்தோட்டை சீமேந்துத் தொழிற்சாலையை நிர்மாணிப்பதற்காக வழங்கப்பட்ட காணியின் விஸ்தீரணம் யாதென்பதையும்;

(ii) மேற்படி தொழிற்சாலையை நிர்மாணிக்கும் கருத்திட்டத்திற்கான முதலீடு எவ்வளவு என்பதையும்;

(iii) மேற்படி கருத்திட்டத்திற்கான முதலீட்டு ஒப்பந்தத்தை மேற்கொண்ட திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4.

2174/2022

கௌரவ ரோஹண பண்டார,— வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2018 ஆண்டு தொடக்கம் இதுவரை வ/ப கல்விச் சேவை ஊழியர்களின் கூட்டுறவுச் சிக்கன, கடனுதவிச் சங்கத்திடமிருந்து கடன் பெற்றுக்கொள்வதற்காக விண்ணப்பப்படிவங்களைச் சமர்ப்பித்துள்ள விண்ணப்பதாரிகளின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) மேற்படி விண்ணப்பதாரிகளுள் இதுவரை கடன் வழங்கப்பட்டுள்ள விண்ணப்பதாரிகளின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(iii) மேலே (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பதாரிகளுள் இதுவரை கடன் வழங்கப்படாதுள்ள விண்ணப்பதாரிகளுக்கு துரிதமாக கடன் வழங்குவதற்கு எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5.

2521/2022

கௌரவ துஷார இந்துனில் அமரசேன,— பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் தொடக்கம் 2019 ஆம் ஆண்டு நவம்பர் வரையான காலப்பகுதியில் பாதுகாப்புச் சபை கூட்டங்கள் நடாத்தப்பட்டுள்ள நாட்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) மேற்படி கூட்டங்களில் பங்கேற்றோர்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) பாதுகாப்புச் சபை கூட்டங்களில் சட்ட ரீதியாக பங்கேற்பதற்கு உரித்துள்ள அரசியல்வாதிகள் மற்றும் அதிகாரிகள் யாவர் என்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) காணப்பட்ட சம்பிரதாயத்துக்கு முரணாக மேற்படி காலப்பகுதியில் பல்வேறு நபர்கள் பாதுகாப்புச் சபைக் கூட்டங்களில் பங்கேற்றுள்ளனர் என்பதை உயிர்த்த ஞாயிற்றுத் தாக்குதல் தொடர்பான சனாதிபதி விசாரணை ஆணைக்குழுவில் வெளிப்படுத்தப்பட்டதை அவர் அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அது தொடர்பாக மேற்கொள்ளப்படும் நடவடிக்கை யாதென்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

6.

2539/2022

கௌரவ சட்டத்தரணி மதுர விதானகே,— பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் அரச சேவைகள் ஓய்வூதிய நிதியத்தில் ஏதேனும் முறைகேடு, முறையற்ற நியமனம், ஊழல் செயற்பாடு அல்லது சட்டவிரோத செயற்பாடு இடம்பெற்றுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அவை வெவ்வேறாக யாவையென்பதையும்;

(iii) மேற்குறிப்பிடப்பட்ட ஒவ்வொரு செயற்பாட்டின் விளைவாகவும் அரசாங்கம் இழந்துள்ள நிதி, சொத்து மற்றும் மனித வளங்களின் பெறுமதி வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி (அ)(i) இல் குறிப்பிடப்பட்ட செயற்பாடுகளுக்குப் பொறுப்புக் கூறவேண்டிய அலுவலர்களை அடையாளம் காண்பதற்கென புலனாய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) பொறுப்புக்கூற வேண்டிய அலுவலர்கள் அடையாளம் காணப்பட்டிருப்பின், அவர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iii) அவர்களுக்கு எதிராக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாவிடின், அதற்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(iv) அவர்களுக்கு எதிராக எதிர்காலத்தில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(v) எதிர்காலத்தில் இடம்பெறக்கூடிய இத்தகைய செயற்பாடுகளைத் தடுப்பதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

7.

2555/2022

கௌரவ குமாரசிறி ரத்நாயக்க,— பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரை, அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தில் ஏதேனும் முறைகேடு, முறையற்ற நியமனம், மோசடி அல்லது சட்ட விரோதச் செயல் இடம்பெற்றுள்ளதா என்பதையும்;

(ii) அவ்வாறாயின், அவை வெவ்வேறாக யாவை என்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு விடயம் காரணமாக அரசாங்கம் இழந்துள்ள நிதி, சொத்துகள் மற்றும் மனித வளங்களின் பெறுமதி வெவ்வேறாக யாது என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி (அ)(i) இல் தெரிவிக்கப்பட்டுள்ள செயல்களுக்குப் பொறுப்புக்கூற வேண்டிய அலுவலர்களை இனங்காண விசாரணைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) பொறுப்புக்கூற வேண்டிய அலுவலர்கள் இனங்காணப்பட்டிருப்பின், இவர்களுக்கு எதிராக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iii) இவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படவில்லையெனின், அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(iv) எதிர்காலத்தில் இவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

(v) எதிர்காலத்தில் இடம்பெறக்கூடிய இத்தகைய செயல்களைத் தடுப்பதற்காக எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

8.

2568/2022

கௌரவ சஞ்ஜீவ எதிரிமான்ன,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) கர்ப்பிணித் தாய்மார்களுக்கும் குழந்தைகளுக்கும் தேவையான திரிபோஷா தற்போது வழங்கப்படுகின்றதா என்பதையும்;

(ii) ஜா-எல, கப்புவத்தையில் அமைந்துள்ள திரிபோஷா தொழிற்சாலையின் உற்பத்தி நடவடிக்கைகள் தொடர்ந்தும் இடம்பெற்று வருகின்றனவா என்பதையும்;

(iii) திரிபோஷா உற்பத்திக்குத் தேவையான மூலப்பொருட்கள் உள்நாட்டில் பெற்றுக்கொள்ளப்படுகின்றனவா என்பதையும்;

(iv) இன்றேல், இறக்குமதி செய்யப்படுகின்றனவா என்பதையும்;

(v) இறக்குமதி செய்யப்படுமாயின், 2015 ஆம் ஆண்டு தொடக்கம் இற்றைவரை இறக்குமதி செய்யப்பட்டுள்ள மூலப்பொருட்களின் அளவு மற்றும் இதற்கென செலவிடப்பட்டுள்ள தொகை தனித்தனியே எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

9.

2888/2022

கௌரவ மாயாதுன்ன சிந்தக அமல்,— வனசீவராசிகள் மற்றும் வனவளங்கள் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கிராமியப் பிரதேசங்களில் நிர்மாணிக்கப்பட்டுள்ள வீடுகள், சொத்துக்கள் மற்றும் பயிர்களுக்கு வன விலங்குகளால் சேதங்கள் விளைவிக்கப்படுகின்றதென்பதை அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அவ்வாறான சேதங்களை அதிகளவில் ஏற்படுத்தும் வனவிலங்குகள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி சேதங்களைத் தடுப்பதற்கு இன்றளவில் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iv) குறிப்பாக மந்திகள் மற்றும் குரங்குகளால் ஏற்படுத்தப்படுகின்ற சேதங்களைத் தடுப்பதற்கு பின்பற்றப்படும் முறையியல் யாதென்பதையும்;

(v) வனவிலங்குகளால் ஏற்படுத்தப்படுகின்ற சேதங்களுக்கு இழப்பீடு வழங்கும் முறையியலொன்று உள்ளதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

10.

3355/2022

கௌரவ லலித் வர்ண குமார,— சுற்றாடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) களுத்துறை மாவட்டத்தில் மணல் அகழ்வதற்காக வழங்கப்பட்டுள்ள உரிமங்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) அவற்றுக்கான மணல் கரை சேர்க்கும் இடங்கள் அமைந்துள்ள பிரதேசங்கள் யாவை என்பதையும்;

(iii) உரிமம்பெற்ற ஒருவரால் மாதாந்தம் அகழ்ந்தெடுக்கக் கூடிய மணலின் அளவு யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மணல் அகழ்வு உரிமம்பெற்றவர்களின் பெயர்கள் புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகத்தில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) மணல் அகழ்வுப் பணிகள் உரிய நிபந்தனைகளுக்கு அமைவாக மேற்கொள்ளப் படுகின்றனவா என்பது தொடர்பில் பரிசோதிக்கப்படுகின்றதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## பிரேரணை முன்னறிவித்தல்

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அலுவல்கள்,— ஒழுங்குப் பத்திரத்தில் காணப்படும் பொது அலுவல்களில் 2 ஆம் இலக்கப் பிரேரணை மீதான நடவடிக்கைகள் இன்றைய அமர்வில் பாராளுமன்ற நிலையியற் கட்டளை 27 இன் ஏற்பாடுகளிலிருந்து விலக்குப் பெறுமாக.

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*1.

தேர்தல் செலவினத்தை ஒழுங்குபடுத்துதல் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*2.

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— அத்தியாவசிய பொதுச் சேவைகள் சட்டத்தின் கீழ் தீர்மானம்,— 1979 ஆம் ஆண்டின் 61 ஆம் இலக்க, அத்தியாவசிய பொதுச் சேவைகள் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் சனாதிபதி அவர்களுக்கு கையளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு அமைய, 2023 சனவரி 17 ஆம் திகதிய 2315/07 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் மற்றும் அதன் அட்டவணையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.01.18 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான பிரகடனம் அங்கீகரிக்கப்படுமாக.

3.

பா. 34/2022

கௌரவ சஜித் பிரேமதாச

கௌரவ சட்டத்தரணி லக்ஷ்மன் கிரிஎல்ல

கௌரவ திஸ்ஸ அத்தநாயக்க

கௌரவ (டாக்டர்) ராஜித சேனாரத்ன

கௌரவ ஹர்ஷண ராஜகருணா

கௌரவ (கலாநிதி) வீ. இராதாகிருஷ்ணன்

கௌரவ அஸோக் அபேசிங்ஹ

கௌரவ எம். எஸ். தௌபீக்

கௌரவ குமார வெல்கம

கௌரவ (கலாநிதி) நாலக கொடஹேவா

கௌரவ (பேராசிரியர்) சன்ன ஜயசுமன

கௌரவ கே.பி.எஸ். குமாரசிறி

கௌரவ டப்ளியூ.எச்.எம். தர்மசேன

கௌரவ டலஸ் அழகப்பெரும

கௌரவ ஜே.சீ. அலவத்துவல

கௌரவ (திருமதி) ரோஹினீ குமாரி விஜேரத்ன

கௌரவ எஸ்.எம். மரிக்கார்

கௌரவ (பேராசிரியர்) ஜீ.எல். பீரிஸ்

கௌரவ துஷார இந்துனில் அமரசேன

கௌரவ இஷாக் ரஹுமான்

கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா

கௌரவ செல்வம் அடைக்கலநாதன்

கௌரவ கோவிந்தன் கருணாகரம்

கௌரவ தவராஜா கலை அரசன்

கௌரவ சட்டத்தரணி வசந்த யாப்பாபண்டார

கௌரவ சட்டத்தரணி அநுர பிரியதர்ஷன யாபா

கௌரவ கயந்த கருணாதிலக்க

கௌரவ ஹேஷா விதானகே

கௌரவ ரஊப் ஹகீம்

கௌரவ ரோஹண பண்டார

கௌரவ இம்ரான் மஹ்ரூப்

கௌரவ முஜிபுர் ரஹுமான்

கௌரவ நிரோஷன் பெரேரா

கௌரவ பாட்டளி சம்பிக ரணவக்க

கௌரவ டிலான் பெரேரா,— 2019 நவம்பர் தொடக்கம் இன்று வரையிலான காலப்பகுதியில் நாட்டின் பொருளாதாரத்தில் ஏற்பட்ட பின்னடைவு தொடர்பில் ஆராய்ந்து அறிக்கையிடுவதற்கும் அது தொடர்பில் தமது முன்மொழிவுகளையும் விதப்புரைகளையும் சமர்ப்பிப்பதற்குமான பாராளுமன்ற விசேட குழு,— இந்நாட்டின் பொருளாதாரம் இன்றளவில் முன்னெப்போதும் இல்லாதவாறு பாரிய நெருக்கடி நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளமையால் இந்நிலைமைக்குப் பொறுப்புக்கூற வேண்டியவர்கள் தொடர்பில் புலனாய்வு செய்ய வேண்டியது, அரசியலமைப்பின் 148 ஆவது உறுப்புரையின் பிரகாரம் பகிரங்க நிதிகள் மீதான பூரண கட்டுப்பாட்டினைக் கொண்டிருக்கும் பாராளுமன்றத்தின் பொறுப்பு என்பதாலும்;

1949 ஆம் ஆண்டின் 58 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 64(2), 65 மற்றும் 68(1) ஆம் பிரிவுகளின் கீழ் நாணயச் சபையால் நிதி என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சருக்கு வழங்கப்பட வேண்டிய வாழ்க்கைச் செலவு, பணவீக்கம், நிதி வழங்கல் மற்றும் சர்வதேச சென்மதி நிலுவை உட்பட பொருளாதார சுட்டிகள் தொடர்பிலான எதிர்வுகூறல் களுடன்கூடிய பகுப்பாய்வு அறிக்கைகள் வழங்கப்படாமையின் மூலம் அல்லது அமைச்சரவை அல்லது அதிகாரிகளினால் தமது பொறுப்புக்கள் தட்டிக்கழிக்கப்பட்டமையின் மூலம் இப் பொருளாதாரக் குற்றம் திட்டமிடப்பட்ட வகையில் மேற்கொள்ளப்பட்டதா என்பது தொடர்பில் புலனாய்வு செய்ய வேண்டியது பாராளுமன்றத்தின் பொறுப்பு என்பதாலும்; மற்றும்

வரி நிவாரணங்களை வழங்குதல், கடன் தவணைகளைச் செலுத்தாதிருத்தல், இறக்குமதி கட்டுப்பாடுகளை விதித்தல், ரூபாயின் பெறுமதியை துரிதமாக மதிப்பிழக்கச் செய்வதற்கு இடமளித்தல், உத்தியோகபூர்வ பணவனுப்பல்கள் வீழ்ச்சியடைதல், நாட்டின் பணவீக்கமானது உச்ச பணவீக்க மட்டம் வரை அதிகரித்தல் மற்றும் வாழ்க்கைச் செலவு அதிகரித்தல் போன்ற விடயங்கள் நாட்டின் பொருளாதார வீழ்ச்சிக்குக் காரணங்களாக அமைந்துள்ளதாலும்;

(அ) இதுவரை எதிர்கொள்ளாத பொருளாதார நெருக்கடியை நாடு எதிர்கொண்டுள்ளமையானது, ஏற்புடைய காலப்பகுதிகளில் பொறுப்பு வகித்த ஆட்கள் தமது பணியை உரியமுறையில் மேற்கொள்வதற்குத் தவறியதன் காரணத்தினால் இடம்பெற்றதா என்பதையும்;

(ஆ) பொருளாதார நெருக்கடியின் பாதிப்பைத் தடுப்பதற்கு மற்றும்/அல்லது குறைப்பதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் போதிய நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனரா என்பதையும்;

(இ) பொருளாதார நெருக்கடியின் பாதிப்பைத் தடுப்பதற்கு மற்றும்/அல்லது குறைப்பதற்கு முடியாமல் போனமைக்கு ஏதுவாக அமைந்த அரச பொறிமுறையின் குறைபாடுகள் இருந்தனவா என்பதையும்;

(ஈ) அவ்வாறான பொருளாதார நெருக்கடிகளை எதிர்கொள்வதற்கு பங்களிப்புச் செய்த இதர விடயங்கள் இருந்தனவா என்பதையும்;

(உ) எதிர்காலத்தில் அவ்வாறான பொருளாதார நெருக்கடிகளுக்கு நாடு தள்ளப்படுவதற்கு பங்களிப்புச் செய்யக்கூடிய இதர விடயங்கள் இருக்கின்றனவா என்பதையும்; மற்றும்

(ஊ) எதிர்காலத்தில் அவ்வாறான பொருளாதார வீழ்ச்சிகளைக் குறைப்பதற்கு மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் யாவை என்பதையும்

ஆராய்ந்து அறிக்கையிடுவதற்கும் அதன் முன்மொழிவுகளையும் விதப்புரைகளையும் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிப்பதற்குமாக பாராளுமன்ற விசேட குழு ஒன்று நியமிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

2. (அ) குழுவின் தவிசாளரும் அதன் உறுப்பினர்களும் சபாநாயகரினால் பெயர் குறித்து நியமிக்கப்படுதல் வேண்டும்; மற்றும்

(ஆ) பாராளுமன்ற நிலையியற் கட்டளை 101 இன் ஏற்பாடுகளின் பிரகாரம் பன்னிரண்டிற்கு (12) மேற்படாத உறுப்பினர்களை குழு கொண்டிருத்தல் வேண்டும்.

3. குழுவானது —

(அ) அதன் கூட்ட நடப்பெண்ணை நிர்ணயிப்பதற்கும்;

(ஆ) மேலே குறிப்பிட்ட விடயம் தொடர்பாக விரிவானதோர் ஆய்வினை மேற்கொள்வதற்காக குழுவினால் அவசியமானது எனத் தீர்மானிக்கப்படும் விதத்தில் எவரேனும் ஆளை, குழுவின் முன் தோன்றுமாறு அழைப்பதற்கும், ஏதேனும் ஆவணத்தை அல்லது பதிவை சமர்ப்பிக்குமாறு எவரேனுமொருவருக்கு பணிப்பு விடுப்பதற்கும், அத்தகைய அனைத்து சாட்சிகளையும் எழுத்துமூலமாக அல்லது வாய்மொழிமூலமாக பெற்றுக்கொள்வதற்கும்;

(இ) குழுவுக்கு உதவி வழங்குவதற்காக தொடர்புடைய துறைகளில் சிறப்பறிஞர்கள் மற்றும் நிபுணர்களின் சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்கும்; மற்றும்

(ஈ) காலத்துக்குக் காலம் இடைக்கால அறிக்கைகளைச் சமர்ப்பிப்பதற்கும், பாராளுமன்றம் ஒத்திவைக்கப்பட்டாலும் அல்லது பாராளுமன்றக் கூட்டத்தொடர் ஒத்திவைக்கப்பட்டாலும் தடைபெறாது கூடுவதற்கும்

தத்துவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

4. குழு அதன் முதலாவது அமர்வுத் திகதியிலிருந்து மூன்று (03) மாத காலத்திற்குள் அல்லது பாராளுமன்றத்தினால் நீடிக்கப்படும் அத்தகைய காலப்பகுதிக்குள் அதன் அறிக்கையை பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

4.

பா. 38/2022

கௌரவ (திருமதி) ரோஹினீ குமாரி விஜேரத்ன

கௌரவ மனோ கணேசன்

கௌரவ வீரசுமன வீரசிங்ஹ

கௌரவ இம்ரான் மஹ்ரூப்

கௌரவ கிங்ஸ் நெல்சன்,— இலங்கையில் சிறுவர்களின் போசாக்கின்மை அதிகரித்து வருகின்றதா என்பது தொடர்பில் ஆராய்வதற்கும், அவ்வாறாயின் அது சம்பந்தமாக மேற்கொள்ள வேண்டிய குறுகிய கால, நடுத்தர கால மற்றும் நீண்ட கால நடவடிக்கைகள் தொடர்பில் ஆராய்வதற்கும், அடையாளங் காணப்பட்ட நடவடிக்கைகளை துரிதமாக செயற்படுத்துவது தொடர்பில் மேற்பார்வை செய்வதற்குமான பாராளுமன்ற விசேட குழு,— ஐக்கிய நாடுகளின் சிறுவர் நிதியமானது (UNICEF) இலங்கையில் சிறுவர் போசாக்கின்மை அதிகரித்து வருவதாக இரண்டாவது தடவையாகவும் அறிவித்துள்ளதாலும்;

இலங்கையில் சிறுவர்களின் உண்மையான போசாக்கின்மை நிலைமை தொடர்பில் பல்வேறான மாறுபட்ட கருத்துகளும் புள்ளிவிபரங்களும் முன்வைக்கப்படுகின்றதாலும்;

கடுமையான போசாக்கின்மை நிலைக்குத் தள்ளப்பட்டுள்ள சிறுவர்களின் எண்ணிக்கை மிகவும் அதிகமாக காணப்படுவதாக பல பகுதிகளில் இருந்தும் பதிவாகி வருகின்றதாலும்;

நீண்ட காலமாக போசாக்கின்மை நிலைமை காணப்படுவதால் எதிர்கால சந்ததியினரின் சுகாதாரம், கல்வி மற்றும் சமூக அபிவிருத்தியின் மீது கடுமையான பாதிப்புகள் ஏற்படக்கூடும் என்பதாலும்;

எதிர்வரும் காலப்பகுதியில் மேலும் 22 இலட்சம் சிறுவர்கள் போசாக்கின்மையால் பாதிக்கப்படுவதற்கு வாய்ப்புள்ளதாக அறிக்கைகள் வெளியாகியுள்ளதாலும்;

ஐக்கிய நாடுகளின் சிறுவர் நிதியத்தினால் (UNICEF) வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள தகவல்கள் தொடர்பாக தீவிரக் கவனம் செலுத்தப்பட வேண்டுமென்பதாலும்;

இலங்கையில் சிறுவர்களின் போசாக்கின்மை அதிகரித்து வருகின்றதா என்பது தொடர்பில் ஆராய்வதற்கும், அவ்வாறாயின் அது சம்பந்தமாக மேற்கொள்ள வேண்டிய குறுகிய கால, நடுத்தர கால மற்றும் நீண்ட கால நடவடிக்கைகள் தொடர்பில் ஆராய்வதற்கும், அடையாளங் காணப்பட்ட நடவடிக்கைகளை துரிதமாக செயற்படுத்துவது தொடர்பில் மேற்பார்வை செய்வதற்குமான பாராளுமன்ற விசேட குழு ஒன்று நியமிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

2. (அ) குழுவின் தவிசாளரும் அதன் உறுப்பினர்களும் சபாநாயகரினால் பெயர் குறித்து நியமிக்கப்படுதல் வேண்டும்; மற்றும்

(ஆ) குழுவானது பாராளுமன்ற நிலையியற் கட்டளை 101 இன் ஏற்பாடுகளினால் தடைபெறாமல், இருபத்தொன்றிற்கு (21) மேற்படாத உறுப்பினர்களை கொண்டிருத்தல் வேண்டும்.

3. குழுவானது,

(அ) அதன் கூட்ட நடப்பெண்ணை நிர்ணயிப்பதற்கும்;

(ஆ) மேற்படி விடயங்கள் தொடர்பில் விரிவாக ஆராய்வதற்கு அது அவசியமென தீர்மானிக்கும் வகையில் அதன் முன் தோன்றுமாறு எவரேனும் ஆளை அழைப்பதற்கும், ஏதேனும் ஆவணத்தை அல்லது பதிவை சமர்ப்பிக்குமாறு பணிப்பு விடுப்பதற்கும், அத்தகைய அனைத்து சாட்சிகளையும் எழுத்து மூலமாகவும் வாய் மூலமாகவும் பெற்றுக்கொள்வதற்கும்;

(இ) குழுவுக்கு உதவி வழங்குவதற்காக தொடர்புடைய துறைகளில் சிறப்பறிஞர்கள் மற்றும் நிபுணர்களின் சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்கும்; மற்றும்

(ஈ) பாராளுமன்றத்தின் ஏதும் ஒத்திவைப்பினால் அல்லது கூட்டத்தொடரின் ஒத்திவைப்பினால் தடைபெறாது காலத்துக்குக் காலம் இடைக்கால அறிக்கைகளை முன்வைப்பதற்கும், கூடுவதற்கும்;

தத்துவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

4. குழு அதன் முதலாவது அமர்வுத் திகதியிலிருந்து ஆறு (06) மாத காலத்திற்குள் அல்லது பாராளுமன்றத்தால் வழங்கப்படக்கூடிய அத்தகைய வேறு காலப் பகுதிக்குள் அதன் அறிக்கையை பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

*5.

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— அத்தியாவசிய பொதுச் சேவைகள் சட்டத்தின் கீழ் தீர்மானம்,— 1979 ஆம் ஆண்டின் 61 ஆம் இலக்க, அத்தியாவசிய பொதுச் சேவைகள் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் சனாதிபதி அவர்களுக்கு கையளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு அமைய, 2023 சனவரி 03 ஆம் திகதிய 2313/25 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் மற்றும் அதன் அட்டவணையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.01.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான பிரகடனம் அங்கீகரிக்கப்படுமாக.

*6.

விலங்கின நலம்பேணல் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*7.

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— நலன்புரி அனுகூலங்கள் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 2002 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க நலன்புரி அனுகூலங்கள் சட்டத்தின் 7(3), 8, 10, 11 மற்றும் 12 பிரிவுகள் மற்றும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியசரின் அரசியலமைப்பின் 44(2) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அச்சட்டத்தின் 27 ஆம் பிரிவின் கீழ் நலன்புரி அனுகூலங்கள் கொடுப்பனவுகள் தொடர்பில் சனாதிபதியால் ஆக்கப்பட்டு, 2022 ஒக்டோபர் 20 ஆம் திகதிய 2302/23 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2022.12.13 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*8.

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ் கட்டளைகள் (இல. 1),— 2021 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தின் பிரிவுகள் 27(1) மற்றும் (5), 28 (2) மற்றும் (3), 64(2) மற்றும் 70 பிரிவுகளுடன் வாசிக்கப்பட வேண்டிய 71 ஆம் பிரிவின் கீழ் கொழும்புத் துறைமுக நகரத்தின் அதிகாரப் பிரதேசத்தின் மற்றும் அதன் இடப்பரப்பில் வியாபாரத்தை மேற்கொள்வதற்கு அங்கீகரிக்கப்பட்ட ஓர் ஆளாகாத் தகைமை பெறுவது தொடர்பில் கொழும்பு நகரப் பொருளாதார ஆணைக்குழுவிடம் வினவி, நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2022 செப்டெம்பர் 28 ஆம் திகதிய 2299/46 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2022.12.13 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளைகள் அங்கீகரிக்கப்படுமாக.

*9.

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ் கட்டளைகள் (இல. 2),— 2021 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க கொழும்பு துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தின் பிரிவு 27(1), 41(3)(ஊ) மற்றும் 41(9) உடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 71(1) ஆம் பிரிவின் கீழ் கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுவிடம் வினவி, நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2022 செப்டெம்பர் 28 ஆம் திகதிய 2299/47 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2022.12.13 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளைகள் அங்கீகரிக்கப்படுமாக.

*10.

போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்,— மோட்டார் வாகனச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— (203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டத்தின் 158 ஆம் பிரிவின் (2) ஆம் மற்றும் (3) ஆம் உப பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 237 ஆம் பிரிவின் கீழ் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2022 யூலை 07 ஆம் திகதிய 2287/28 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2022.12.13 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*11.

பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர் மற்றும் கைத்தொழில் அமைச்சர்,— இலங்கைத் தேயிலைச் சபைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 1),— 1975 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, இலங்கைத் தேயிலைச் சபைச் சட்டத்தின் 4 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 25 ஆம் பிரிவின் கீழான இலங்கைத் தேயிலைச் சபையினால் ஆக்கப்பட்டு பெருந்தோட்டத் தொழில் அமைச்சரினால் அங்கீகரிக்கப்பட்டு, 2021 செப்டெம்பர் 17 ஆம் திகதிய 2245/29 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.01.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

*12.

பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர் மற்றும் கைத்தொழில் அமைச்சர்,— இலங்கைத் தேயிலைச் சபைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 2),— 1975 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, இலங்கைத் தேயிலைச் சபைச் சட்டத்தின் 4 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 25 ஆம் பிரிவின் கீழான இலங்கைத் தேயிலைச் சபையினால் ஆக்கப்பட்டு பெருந்தோட்டத் தொழில் அமைச்சரினால் அங்கீகரிக்கப்பட்டு, 2021 ஒக்டோபர் 06 ஆம் திகதிய 2248/36 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.01.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

*13.

பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர் மற்றும் கைத்தொழில் அமைச்சர்,— இலங்கைத் தேயிலைச் சபைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 3),— 1975 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, இலங்கைத் தேயிலைச் சபைச் சட்டத்தின் 4(2)(ஊ) மற்றும் 8(1) ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 25 ஆம் பிரிவின் கீழான இலங்கைத் தேயிலைச் சபையினால் ஆக்கப்பட்டு பெருந்தோட்டத் தொழில் அமைச்சரினால் அங்கீகரிக்கப்பட்டு, 2021 ஒக்டோபர் 06 ஆம் திகதிய 2248/37 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.01.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப் பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

*14.

பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர் மற்றும் கைத்தொழில் அமைச்சர்,— இலங்கைத் தேயிலைச் சபைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 4),— 1975 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, இலங்கைத் தேயிலைச் சபைச் சட்டத்தின் 25 ஆம் பிரிவின் கீழான இலங்கைத் தேயிலைச் சபையினால் ஆக்கப்பட்டு பெருந்தோட்டத் தொழில் அமைச்சரினால் அங்கீகரிக்கப்பட்டு, 2021 டிசம்பர் 14 ஆம் திகதிய 2258/14 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.01.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

*15.

பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர் மற்றும் கைத்தொழில் அமைச்சர்,— கம்பனிச் சட்டத்தின் கீழ் கட்டளைகள்,— 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க, கம்பனிகள் சட்டத்தின் 477 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 527 ஆம் பிரிவின் கீழ் மற்றும் 2005 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க சங்கங்கள் கட்டளைச் சட்டத்துடன் (திருத்தியமைக்கப்பட்ட) வாசிக்கப்பட வேண்டிய 1891 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க சங்கங்கள் கட்டளைச் சட்டத்தின் (123 ஆம் அத்தியாயம்) 19 ஆம் பிரிவின் கீழ் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரினால் விதிக்கப்பட்டு 2022 ஒக்டோபர் 25 ஆம் திகதிய 2303/07 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.01.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளைகள் அங்கீகரிக்கப்படுமாக.

*16.

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் திருத்தப்பட்டவாறான, 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் 4(1) மற்றும் 14 ஆம் பிரிவுகளுடனும் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ், நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2022 செப்டெம்பர் 09 ஆம் திகதிய 2296/30 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2022.10.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*17.

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— அரச துறை உத்தியோகத்தர்களின் கட்டாய ஓய்வு பெறும் வயதினை 60 ஆகக் குறைத்தல் - 22/1480/601/012 ஆம் இலக்க அமைச்சரவைக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள விசேட சேவைகள்/பதவிகளுக்கு ஏற்புடையவாறு கட்டாயமாக ஓய்வு பெற வேண்டிய வயதெல்லைகளைக் கருத்திற்கொள்வதற்காக நியமிக்கப்பட்ட அமைச்சர் குழுவின் விதந்துரைகளை நடைமுறைப்படுத்தல் மீதான தீர்மானம்,—

அரச துறை உத்தியோகத்தர்களின் கட்டாய ஓய்வு பெறும் வயதினை 60 ஆகக் குறைப்பது சம்பந்தமாக பிரதம அமைச்சர் மற்றும் அரசாங்க நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் அவர்களினால் சமர்ப்பிக்கப்பட்ட 2022.09.09 ஆம் திகதிய அமைச்சரவை விஞ்ஞாபனத்திற்கு அமைப/22/1403/605/014 ஆம் இலக்க, 2022.09.12 ஆம் திகதிய அமைச்சரவை அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இது சம்பந்தமாக ஜனாதிபதி மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரினால் 2022.09.22 ஆம் திகதிய 02 அமைச்சரவைக் குறிப்புக்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

ஜனாதிபதி அவர்களினால் சமர்ப்பிக்கப்பட்ட 2022.09.22 ஆம் திகதிய மேற்குறித்த அமைச்சரவைக் குறிப்பு சம்பந்தமான அமைப/22/1480/601/012 ஆம் இலக்க, 2022.10.03 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானம் ஊடாக, அந்தக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள சேவைகளுக்கு/பதவிகளுக்கு ஏற்புடைய கட்டாய ஓய்வு பெறும் வயதினை, அதில் முன்மொழியப்பட்டுள்ளவாறு திருத்தியமைப்பது சம்பந்தமாக விடயங்களை மேலும் ஆராய்ந்து அமைச்சரவைக்குப் பொருத்தமான விதந்துரைகளை சமர்ப்பிப்பதற்காக கௌரவ பிரதம அமைச்சர் அவர்களின் தலைமையிலான அமைச்சர் குழுவொன்றை நியமிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

பிரதம அமைச்சரின் தலைமையிலான மேற்குறித்த அமைச்சர் குழு ஏற்புடைய விடயங்களை ஆராய்ந்து தமது விதந்துரைகள் உள்ளடங்கிய அறிக்கையினை 2022.10.10 ஆம் திகதிய அமைச்சரவைக் குறிப்பு ஊடாக அமைச்சரவைக்கு சமர்ப்பித்துள்ளதுடன், அமைப/22/1632/602/009 ஆம் இலக்க, 2022.10.17 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானம் ஊடாக பின்வரும் விதந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது:-

1. விசேட வைத்திய அதிகாரிகள், அரச வைத்திய அதிகாரிகள், பல் வைத்திய அதிகாரிகள் மற்றும் அரசில் பதிவுசெய்த வைத்திய அதிகாரிகளுக்கு மாத்திரம் ஏற்புடையவாறு, அமைப/22/1632/602/009 ஆம் இலக்க, 2022.10.17 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் (II) (அ), (ஆ) இல் குறிப்பிடப்படுகின்றவாறு நடவடிக்கை மேற்கொள்வதற்கு உட்பட்ட வகையில், அமைச்சர் குழு அறிக்கையின் (அ) முதல் (உ) வரையான விதந்துரைகளை நடைமுறைப்படுத்தல்.

அமைப/22/1632/602/009 ஆம் இலக்க, 2022.10.17 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் (II) (அ), (ஆ) உட்பிரிவுகள் :-

(அ) ஜனவரி மாதம் 01 ஆம் திகதி முதல் யூன் மாதம் 30 ஆம் திகதி வரையான காலப்பகுதியினுள் தமது பிறந்தநாள் காணப்படுகின்ற வைத்தியர்களுக்கு ஏற்புடைய ஆண்டின் ஜூன் மாதம் 30 ஆந் திகதி வரை சேவையாற்றுவதற்கு சந்தர்ப்பம் வழங்கி ஓய்வு பெறச் செய்தல்,

(ஆ) ஜூலை மாதம் 01 ஆந் திகதி முதல் டிசம்பர் 31 ஆந் திகதி திகதி வரையான காலப்பகுதியினுள் தமது பிறந்தநாள் காணப்படுகின்ற வைத்தியர்களுக்கு ஏற்புடைய ஆண்டின் டிசம்பர் மாதம் 31 ஆந் திகதி வரை சேவையாற்றுவதற்கு சந்தர்ப்பம் வழங்கி ஓய்வு பெறச் செய்தல்,

அமைச்சர் குழு அறிக்கையின் (அ) முதல் (உ) வரை குறிப்பிடப்பட்டுள்ள விதந்துரைகள்:-

(அ) ஏலவே 63 வயதினைப் பூர்த்தி செய்துள்ள வைத்தியர்களை எதிர்வரும் டிசம்பர் 31 ஆந் திகதிக்கு முன்பு ஓய்வு பெறச் செய்தல்,

(ஆ) தற்போது 62 வயதினைப் பூர்த்தி செய்துள்ள வைத்தியர்களை அவர்கள் தமது 63 வயதினைப் பூர்த்தி செய்யும்போது ஓய்வு பெறச் செய்தல்,

(இ) தற்போது 61 வயதினைப் பூர்த்தி செய்துள்ள வைத்தியர்களை அவர்கள் தமது 62 வயதினைப் பூர்த்தி செய்யும்போது ஓய்வு பெறச் செய்தல்,

(ஈ) தற்போது 60 வயதினைப் பூர்த்தி செய்துள்ள வைத்தியர்களை அவர்கள் தமது 61 வயதினைப் பூர்த்தி செய்யும்போது ஓய்வு பெறச் செய்தல்,

(உ) தற்போது 59 வயதினைப் பூர்த்தி செய்துள்ள வைத்தியர்களை அவர்கள் தமது 60 வயதினைப் பூர்த்தி செய்யும்போது ஏனைய அரச உத்தியோகத்தர்களைப் போன்று ஓய்வு பெறச் செய்தல்.

அந்தக் குறிப்பின்படி, விதந்துரைக்கப்பட்ட வைத்தியர்களை ஓய்வு பெறச் செய்யும் இடைக்கால நடவடிக்கைகள் 2023 டிசம்பர் 31 ஆந் திகதியுடன் நிறைவடைய வேண்டும் என்பதுடன், அதன் பின்பு ஏனைய சகல அரச உத்தியோகத்தர்களையும் போன்று வைத்திய அதிகாரிகளும் 60 வயது பூர்த்தியடையும்போது ஓய்வு பெற வேண்டும் என்பது.

2. பிரேரணை அங்கீகாரத்திற்கு அனுமதி கிடைத்த பின்பு, மேற்குறித்த தீர்மானத்தைச் செயற்படுத்துவதற்கு ஏற்புடையவாறு பொருத்தமான முறையில் ஓய்வூதியப் பிரமாணக் குறிப்பினைத் திருத்தியமைத்தல்.

மேற்குறித்த அமைப/22/1632/602/009 ஆம் இலக்க, 2022.10.17 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்திற்கு ஏற்ப, மேலே 1 மற்றும் 2 இல் உள்ளவாறு நடைமுறைப்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானம் நிறைவேற்றுகின்றது.

18.

சர்வதேச லயன்ஸ் கழகம் மாவட்டம் 306ஏ-தேசிய அபிவிருத்தி மன்ற நம்பிக்கை நிதியம் (கூட்டிணைத்தல்) (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

19.

சொத்துக்களையும் பொறுப்புக்களையும் வெளிப்படுத்தல் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

20.

புகையிலை வரி (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

21.
வைட் றோஸ் மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

22.
ரொசான் ரணசிங்க ஜனசஹன மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

23.
மனித உரிமைகள் அமைப்பு (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

24.
சிவில் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

25.
சமாதானம், கல்வி வலுவூட்டல் மற்றும் அபிவிருத்தியிற்கான விளையாட்டு நிறுவகம் (SPEED) (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

26.
இலங்கை பட்டயப் போக்குவரத்து நிறுவனம் (கூட்டிணைத்தல்) (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

27.
அவசரகால பொதுச் சுகாதாரச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

28.
ஶ்ரீ பாலாபிவூர்தி வர்தன சமிதிய (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

29.
சமாதி சமூக அபிவிருத்தி மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

30.
கிழக்கு மீளெழுச்சி அமைப்பு (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

31.
இலங்கை ஐக்கிய கிறிஸ்தவ நட்புரிமை (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

32.
இலங்கை பட்டயக் கப்பற் தரகர்கள் நிறுவனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

33.
சமாதி சுகாதார சேவைகள், சுற்றாடல், விவசாய, கலாசார மற்றும் விளையாட்டு நிலையம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

34.
தென்னிலங்கை மூன்றாம் நிலைக் கல்வி மற்றும் தலைமைத்துவப் பயிற்சிபீடம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

35.
சஹன சமுதாய அபிவிருத்தி மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

36.
சமாதி தியான மன்றும் யோகாசன நிலையம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

37.
றுஹுணு உதானய அமைப்பு (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

38.
"மாத்தறைப் பருவம்" அமைப்பு (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

39.
ரதன திஸ்ஸ சமாதான மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

40.
இலங்கை காப்புறுதி நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

41.
ஷைலி கல்விசார் மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

42.
விவாக (பொது) (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

43.
முஸ்லிம் திருமணம், மணநீக்கம் (நீக்கம்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

44.
களனி பௌத்த மகளிர் தருமச் சங்கம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

45.
தஸ்ஸனா பௌத்த சன்விதானய (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

46.
இந்திரா புற்றுநோய் நம்பிக்கைப் பொறுப்பு (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

47.
இலங்கை பிளாஸ்டிக் மற்றும் இறப்பர் நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

48.
திருமணப் பதிவு (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

49.
திருமணத்திற்கான ஆகக்குறைந்த வயது சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

50.
இலங்கை கட்டிட சேவைகள் பொறியியல் மற்றும் தொழில்நுட்பவியல் நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.